மின்னிதழ்
# தேசியம்
THESIYAM தேசியம்
www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT

No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

குரல் - 86 | 18.06.2023 (ஞாயிற்றுக்கிழமை) | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 7 | ஊக்குவிப்பு : ரூ.30.00







பக்கம் 05

# தேரர்களுக்கு அடிபணிந்து தமிழர்களை ஏமாற்றாதீர்கள் : ஜனாதிபதியிடம் வலியுறுத்தும் தமிழ் அரசியல்வாதிகள்!!

குருந்தூர் மலை, திரியாய விடயத்தில் தோரர்களின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து தீர்க்கமாக எடுக்கப்பட்ட முடிவுகளை மாற்றி தமிழர்களை தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் தமிழ்த் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை.சோ.சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் சி.வி.விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரே மேற்கண்டவாறு வலியுறுத்தலைச் செய்துள்ளனர்.

## அதிகமான ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்ட வரலாறு


### இலங்கைக்கு மட்டுமே உள்ளது..! கருணாகரம் எம்.பி!!



மக்களுக்கோ மக்கள் நலன்சார்ந்த திட்டங்களுக்கோ எதிராக செயற்படும் எந்த அரசாங்கத்தினையும் தேர்தல் மூலமாக மாத்திரமல்ல வேறுவிதமாகவும் துரத்தியடிக்கும் நிலையுருவாகும் என மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

பக்கம் 05

## சிங்களக் குடியேற்றங்களை தமிழ் நிர்வாகத்துடன் இணைக்கும் செயற்பாடு தீவிரம்!



பக்கம் 05

வவுனியா வடக்கின் எல்லையில் குடியேற்றப்பட்ட சிங்கள கிராமங்கள் சிலவற்றை வவுனியா மாவட்டத்தின் நிர்வாகத்திற்குள் எடுப்பதற்கான அவதானம் ஒன்றை செலுத்துமாறு தேசிய எல்லை நிர்ணய குழவினால் வவுனியா மாவட்ட நிர்வாகத்திற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.
வவுனியா மாவட்ட எல்லை நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றிருந்தது.
இதன்போது தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் பரிந்துரை

## தனிச்சிங்கள சட்டம் நாட்டிற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது

### சுனேத்திரா பண்டாரநாயக்க



பக்கம் 05

தனது தந்தை கொண்டுவந்த தனிச்சிங்கள சட்டத்தினால் நாடு பெரும்பாதிப்பை எதிர்கொண்டது என்பதை ஏற்றுக்கொள்வதாக முன்னாள் பிரதமர் எஸ்.டபியு.ஆர்.டி பண்டாரநாயக்கவின் மகள் சுனேத்திரா

## நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளதா..??

### மொட்டு : ரணில் பிளவால் ஏற்படபோகும் விளைவு எச்சரித்த சுரேஸ்.!



பக்கம் 05

நாட்டில், ஆட்சியிலுள்ள தற்போதைய அரசாங்கத்தின் மீது சிங்கள மற்றும் தமிழ் மக்கள் பாரிய வெறுப்பு மற்றும் கோபத்துடனே காணப்படுவதாக ஈழ மக்கள் புரட்சிகர முன்னணின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். நேற்று யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். பொதுஜன பெரமுனவிற்கும் ஜனாதிபதிக்கும் இடையில் பாரிய கருத்து மோதல்கள் இடம்பெற்று வருவதாகவும் இதனால் நாட்டில் ஒரு அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளதாகவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.
இலங்கையில் இவ்வாறு அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படும்போது, உதவி வழங்குகின்ற நாடுகள் மற்றும் சர்வதேச நாணயநிதியம் என்பன இலங்கைக்கு உதவிகளை வழங்குவதில் பின்நிற்கும்

## யாழில் சட்டவிரோத மணல் கொள்ளையில் ஈடுபடும் இராணுவத்தில் பணியாற்றிய நபர்..! கண்டுகொள்ளாத பொலிஸார்!

### நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் குற்றச்சாட்டு!!

பக்கம் 05

# கனேடியப் பிரதமரின் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் : சரத் வீரசேகர!!



இலங்கை இராணுவத்தின் உறுப்பினர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள சர்வதேச பயணத் தடை மற்றும் கனேடியப் பிரதமரின் இனப்படு கொலை தொடர்பான பொய்க் குற்றச்சாட்டுகளுக்கு எதிராகக் கடுமையான நிலைப்பாட்டை மேற்கொள்ள வேண்டும் என தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர அறிவுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் கூடிய தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக்குழுவுக்கு தலைமைதாங்கியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள சர்வதேச பயணத் தடையானது இராணுவத்தினரின் மன உறுதியைப் பாதிப்பதால், அதற்கு எதிராக செயற்பட வேண்டியதன் அவசியத்தையும், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வெளிவிவகார அமைச்சின் தலையீட்டின் முக்கியத்துவத்தையும் தேசிய பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர வலியுறுத்தினார்.

இது தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டை அந்த நாடுகளின் அரசாங்கங்களுக்கு தூதுவர்கள் ஊடாகவும் உயர்மட்ட இராஜதந்திர பேச்சுவார்த்தைகளின் ஊடாகவும் வலுவாகத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக இதற்குப் பதிலளித்த வெளிவிவகார அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டினார். இவ்வாறான முடிவுகளை மறுபரிசீலனை செய்ய சம்பந்தப்பட்ட அரசுகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த நாட்டின் இராணுவ உறுப்பினர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள பயணத்தடையை எதிர்ப்பதற்கு தேவையான அனைத்து உண்மைகளையும் சேகரித்து உரிய தூதுவர்களிடம் வழங்குமாறு வெளிவிவகார அமைச்சின் செயலாளருக்குக் குழுவினால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

அத்துடன், தருஸ்மன் மற்றும் பூஜஊடு ஆகிய இரண்டு அறிக்கைகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளபடி, இலங்கை ஒரு சர்வதேச இராணுவ மோதலைக் கொண்டிராத நாடு என்பதால் இவ்வாறு பயணத்தடை விதிப்பது ஜெனீவா உடன்படிக்கைக்கு எதிரானது என்ற விடயத்தை வலியுறுத்துமாறும் குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இலங்கை தமிழ் மக்களுக்கு எதிராக இனப்படுகொலை இடம்பெற்றிருப்பதாக கனேடியப் பாராளுமன்றத்தில் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்டு அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மற்றும் இவ்வாறான கருத்துக்களுக்கு இலங்கை பொறுப்பல்ல என்பதை மற்ற நாடுகளுக்கு அறிவித்தமை குறித்த விபரங்களை சமர்ப்பிக்குமாறும் குழு வெளிவிவகார அமைச்சின் செயலாளரிடம் இதன்போது கோரியது.

இலங்கை இராணுவத்தின் எண்ணிக்கையை சரியான அளவில் பேணுவது, சில கிராமப் பகுதிகளில் இருந்து இராணுவத் தளங்களைத் திரும்பப் பெறுவது மற்றும் அது தேசிய பாதுகாப்பில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் குழு கேட்டறிந்தது.

இராணுவத்தினரை முறைப்படுத்துவது ஆட்குறைப்புச் செய்வது அல்ல என்றும், முகாம்களை அகற்றுவது தேசிய பாதுகாப்பு, பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் புனித இடங்களில் பாதுகாப்புக்கு பாதிப்பாக அமையாது எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் குழுவில் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பில் குழு கவனம் செலுத்தியதுடன், தீவிரவாதத்தை தோற்கடிக்க செயற்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியது.

## நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய திருவிழா! 40 படகுகளுக்கு சேவையில் ஈடுபட அனுமதி!!



வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய பெருந்திருவிழா ஆரம்பமாகவுள்ளதால், குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவுக்கு 40 படகுகள் பயணிகள் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்,

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் பெருந்திருவிழா எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், பயணிகள் பயணிப்பதற்கு ஏற்புடைய படகுகளுக்கான அனுமதிப்பத்திரம் கப்பற்துறை வணிக அமைச்சின் செயலகத்தில் இருந்து பெறபட வேண்டியது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் கச்சதீவு பெருநாளையொட்டி 21 படகுகள், பயணிகளின் பயணத்துக்கு ஏற்றவை என அனுமதிக்கப்பட்டிருந்தன.

நயினாதீவு பெருந்திருவிழாவுக்கு இம்முறை மேலதிகமாக 21 படகுகள் விண்ணப்பித்திருந்த நிலையில் 19 படகுகளுக்கு மட்டுமே அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

இரு படகுகளுக்கு திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் உற்சவ காலத்தில் 40 படகுகள் சேவையில் ஈடுபடும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

## விடுதலைபுலிகளை மீள உருவாக்க முயற்சி! போதைப்பொருள் ஆயுத கடத்தல் முயற்சி!!

### 13 பேருக்கு எதிராக இந்திய புலனாய்வு அமைப்பு குற்றச்சாட்டு




விடுதலைப்புலிகளை மீளஉருவாக்குவதற்காக ஆயுதங்கள் போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைதுசெய்யப்பட்ட பத்து இலங்கையர்கள் உட்பட 13 பேருக்கு எதிராக இந்திய தேசிய புலனாய்வு முகவர் அமைப்பு வியாழக்கிழமை குற்றச்சாட்டுகளை பதிவுசெய்துள்ளது.

இலங்கை இந்தியாவில் விடுதலைப்புலிகளிற்கு புத்துயர் அளிப்பதற்காக ஆயுதம் பணம் போதைப்பொருள் ஆயுதங்களை சேகரித்தல் பதுக்கிவைத்தல்போன்றவற்றிற்காக இவர்கள் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டனர் என இந்தியாவின் என்ஐஏ குற்றச்சாட்டுகளை சுமத்தியுள்ளது.

இலங்கையை சேர்ந்த குணா என அழைக்கப்படும் குணசேகரன் பூக்குட்டி கண்ணா என அழைக்கப்படும் புஸ்பராஜாவும் பாக்கிஸ்தானை சேர்ந்த போதைப்பொருள் வர்த்தகர் ஹாஜிசலீம் என்பவருடன் இணைந்துசெயற்பட்டனர் எனவும் இந்திய புலனாய்வு அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

விடுதலைப்புலிகளிற்கு புத்துயுர் கொடுப்பதற்கான சதிமுயற்சிகள் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளன அவர்கள் கடந்தவருடம் திருச்சி விசேட முகாமில் கைதுசெய்யப்பட்டனர் குற்றச்செயல்கள் மூலம் கிடைக்கும் பணத்தை பயன்படுத்தி அவர்கள் ஆடம்பரமான வாழ்க்கை வாழ்ந்துள்ளனர் எனவும் இந்திய புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவின் முன்கூட்டியே செயற்படுத்தப்பட்ட சிம்கார்ட்டுகளுடன் பல கையடக்க தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டன போதைப்பொருள் வர்த்தகம் தொடர்பில் பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன பெருமளவு பணமும் தங்கப்பாளங்களும் கைப்பற்றப்பட்டன என இந்திய புலனாய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலமே பணமும் தங்கமும் கிடைத்துள்ளது இந்த பணத்தை இவர்கள் சட்டவிரோதமாக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பரிமாறியுள்ளனர் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

## டக்ளஸ் தலைமையில் ஒருங்கிணைப்பு குழு கூட்டம்! சபையில் கடுமையான வாக்குவாதம்!!



கட்டைக்காட்டு பகுதியில் நேற்று முன்தினம் (15.06.2023) இரவு கடற்படையினர் சரமாரியாக கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலே இவ்வாறு கடற்படையினர், கடற்றொழிலாளர்கள் மீது தாக்குதல் நடத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கேள்வி எழுப்பப்பட்ட போது, தம்மீது கடற்றொழிலாளர் ஒருவர் தாக்குதல் நடத்த முற்பட்ட வேலையை தான் தாக்குதல் நடத்தியதாக வெற்றிலைக்கேணி கடற்படை முகாமிற்கு பொறுப்பான கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சபையில் கலந்து கொண்டிருந்த மருதங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் வினவிய, பிரதேச மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் அமைச்சர் தேவானந்தா, கடற்படை மீது தாக்கல் நடத்த முற்பட்ட வேலை தாக்குதல் நடத்தியதாக தமது ஆரம்பகட்ட விசாரணையின் போது தெரியவந்துள்ளதாக அறிவித்தார். இது தொடர்பில் சபையில் வாத பிரதிவாதங்கள் கடுமையாக இடம்பெற்றது. இதேவேளை இங்கு கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் தாக்குதல் நடத்துவதற்கு கடற்படைக்கு உரிமை இல்லை என்றும் தெரிவித்ததுடன் அவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் அல்லது சந்தேகங்களை சட்டரீதியான நடவடிக்கைக்கு முன்வைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.



# ஒவ்வொரு மாணவனும் இலட்சியமுடையவானாக இருக்க வேண்டும்!
## இலட்சியமில்லாத வாழ்க்கை வாழ்க்கையல்ல!! : நீதிபதி எம்.எச்.எம்,ஹம்ஸா









எதிர்காலத்தில் இந்த நாட்டை வளப்படுத்துகின்ற செல்வங்களான "மாணவர்களை" மாணவச் செல்வங்கள் என்று அழைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன் என அக்கரைப்பற்று நீதவான் மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம், ஹம்ஸா தெரிவித்தார். அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் சமூதாய சார் சீர்திருத்த திணைக்களத்தின் பங்களிப்புடன் நடைபெற்ற போதைப் பொருள் பாவனை தடுப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேய மாவட்ட நீதிபதி கூறினார்.

பாடசாலை அதிபர் ஏ.பீ.முஜீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் நீதிபதி ஹம்ஸா தொடர்ந்து உரையாற்றுகையில் ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனித்தனி திறமையும் ஆற்றலும், இலட்சியமும் காணப்படுகின்றன இவ்வாறான நிலையில் அந்த இலட்சியத்தை சிதைக்கின்ற செயற்பாடுகள் மிக கச்சிதமாக செயற்படுத்தப்பட்டு வருவதையறிந்து பல சந்தர்ப்பங்களில் நான் கவலைப்பட்டிருக்கின்றேன். எனது அனுபவத்தில் பல நீதிமன்றங்களில் மாணவர்களை சந்தகே நபர்களாக முன்னிலைப்படுத்துகின்ற போது அவர்களுடன் உரையாடியிருக்கின்றேன். அவர்களது குடும்ப நிலமை, வறுமை, கெட்ட நண்பர்களின் சகவாசம் போன்றன அவர்களை தீய செயல்களுக்கிட்டுச் சென்றிருப்பதை அறிய முடிந்தது.

நானும் எனது ஓ.எல். பருவத்திலும் பல இணைப்பாடவிதான செயற்பாட்டிலும், விளையாட்டுகளிலும், புறக்கீர்த்திய செயற்பாட்டிலும் ஈடுபட்டிருக்கிறேன். எனது பாடசாலை காலங்ளில் சரியாக பயன்படுத்தியதனால் இன்று உங்கள் முன் நீதிபதியாக வந்திருக்கிறேன். உங்களில் பலர் வைத்தியர்களாகவும், சட்டத்தரணிகளாகவும், பொறியியலாளர்களாகவும், ஏன் நீதிபதிளாகக்கூட வர முடியும். அதை சிதைப்பதற்கு ஒரு குழுவினர் மாபியாவாக செயற்பட்டுக்கொண்டிருப்பதை, அதனால் வரும் அபாயத்தைப்பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும். ஒவ்வொரு மாணவனும் இலட்சியமுடையவானாக இருக்க வேண்டும், இலட்சியமில்லாத ஒரு வாழ்க்கை வாழ்க்கையல்ல ஒவ்வொருவரும் பெரும் கனவுகளை காண வேண்டும். இருக்கின்ற இலட்சியத்தை அடைவதற்கு அந்தக் கனவுகளை நனவாக்கும் வகையில் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் அப்போதுதான் இவ்வாறான அபாயங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும்.

எனவே உங்களுடைய இலட்சியத்தை அடைவதற்கு தடையாகவிருக்கின்ற தடைக்கற்களை இனங்கண்டு உங்கள் இலட்சியத்தை முன் நோக்கி நகர்த்துவதற்கு திட்டமிட்டு செயற்பட வேண்டும். ஏன் என்றால் இலட்சியமில்லாத வாழ்வு "அச்சாணியற்ற தேர்" போன்றது. மேலும் ஒருவரது வாழ்வில் இலட்சியத்தோடு பயணிக்காமல் மனம் போன போக்கில் வாழ்வது நடைபிணைத்திற்கு ஒப்பானது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இலட்சியத்தையடைகின்ற பயணத்தில் பின்னடைவுகளை சந்திக்க நேரிடும் அப்போதெல்லாம் துவண்டுவிடாமல் மன உறுதியோடு நமது செயற்பாடுகளை முன்னோக்கி நகர்த்திச்செல்ல அர்ப்பணிப்போடு கருமமாற்ற வேண்டும்.

பின் வரிசையிலிருக்கின்ற மாணவர்கள் எனக்கு கணிதமெறாது, ஆங்கிலம் வராதுயென்ற எண்ணத்திலிருக்காமல் அந்த எண்ணங்களை இன்றுடன் விட்டுவிடுங்கள். பல பின் வரிசை மாணவர்கள்தான் இன்று பெரும் பெரும் பதவிகளில் இருக்கிரார்கள். முட்டாள் மூலையென்று அழைக்கப்பட்ட பின்வரிசை மூலையில் கல்விகற்ற "வேனாட்சா" பிற்காலத்தில் அறிஞரென்று அழைக்கப்பட்டார் அதே போன்று "தோமஸ் அல்வா எடிசன்" போன்ற விஞ்ஞானிகளை அவதானித்தால் அவர்ளுடைய மாணவ பருவ செயற்பாடுகள் அறிவு குறைந்த செயற்பாடுகளாகவேயிருந்திருக்கும். பிற்காலத்தில் அவர்கள் சமூதாயத்திற்கு பயனுள்ளவர்களாகவும், அவர்களால் சமூகம் நண்மையடையக்கூடிய வகையிலும் பெரும் அறிஞர்களாக வளர்ச்சி பெற்றுயிருந்தார்கள்.

பெரும்பாலான மாணவர்களுக்கு நீதிமன்ற செயற்பாடுகளை அறிந்திருக்க வாய்ப்பில்லை எனவே நீதிமன்றங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு நடைபெறுகின்ற விடயங்களை அவதானிக்கச்செய்கின்ற போது எதிர் காலத்தில் குற்றச்செயல்களில் ஈடுபடக்கூடாதென்ற எண்ணமும், அச்சமும் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் உருவாகும். அதனால் பல்வேறு படிப்பினைகளை அவர்கள் பெறுவார்கள். மாணவர்கள் நீதிமன்ற கட்டமைப்பையறிந்து கொள்ளும் வகையில் நேரடியாகச் சென்று பார்ப்பதன் மூலம் எவ்வாரான குற்றச் செயல்களுக்கு எப்படியான தண்டனைகள் வழங்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்வார்கள், சீர்திருத்தப்பாடசாலை, சிறைச்சாலை போன்றவற்றுக்கு தண்டனை வழங்கப்படுதல், மரணதண்டனை விதித்தல் என்பவற்றை மாணவர்கள் நேரடியாக பார்க்கின்ற போது குற்றச்செயல்களில் ஈடுபடுகின்ற நிலையிலிருந்து விடுபட்டு விலகி.நடக்க காரணமாக அமையும்.

அண்மைக்காலமாக எமது பகுதிகளில் மட்டுமல்ல இலங்கையின் பல பாகங்களிலும் போதைவஸ்து பாவனை புற்று நோய்போன்று உருவெடுத்து சமூதாயத்தையும், குடும்பங்ளையும் சீரழித்துக்கொண்டிருக்கின்றது.

போதைவஸ்து பாவனைபற்றி அறியாத மாணவர்களாகிய எங்களிடம் இதைப்பற்றி ஏன் கூறுகிரார்கலென்று நீங்கள் யோசிக்கலாம் ஆனால் மாணவர்களே நீங்கள்தான் போதை மாபியா குழுக்களால் அல்லது வலைப்பின்னாலால் இலக்கு வைக்கப்பட்டுள்ளீர்கள் உங்களைதான் அவர்கள் தேர்வு செய்ய காத்துக் கொண்டிருக்கிரார்கள் இலகுவாக நீங்கள் அவற்றுக்கு அடிமையாகக் கூடிய வகையில் திட்டம் போட்டு செயற்படுகிரார்கள் இதனால் மாணவச் செல்வங்களின் எதிர்காலம் சீரழிக்கப்படுவதோடு போதை வியாபாரம் இலகுவாக அதிகரித்து சமூதாயத்தை அழிவுப் பாதைக்கியிட்டுச் செல்லுகின்றது. பலர் பணம் சம்பாதிப்பதற்கு போதை வஸ்து வியாபாரத்தை ஒரு வருமான மூலமாக கையிலெடுத்துள்ளதால் நமது இளம் தலைமுறையினர் அதற்கு அடிமையாகி தமது வாழ்வை பலிகொடுத்து வருகிரார்கள்.

பல பேச்சாளர்கள் வந்து நீதிமன்றத்தில் நடைபெறும் விடயங்களை முன் வைத்துக் கேள்விச்சான்று கூறுவதை விட ஒரு நீதிபதியாக உங்கள் முன் வந்து பல விடயங்களை ஒப்புவைக்கின்றேன் இதனை ஒரு படிப்பினையாகவெடுத்து மாணவர்களாகிய நீங்கள் எதிர்கால வாழ்வை வழமுள்ளதாக தனது குடும்பத்திற்கும், தான் வாழும் சமூதாயத்திற்கும் பயனுள்ளதாக வாழ்ந்து காட்ட தங்களது படிப்பை மட்டுமே ஆயுதமாகக்கொள்ள வேண்டும். தங்களது இலட்சியத்தை நோக்கி பயணிக்க வேண்டும் அவ்வாறுயில்லாமல் போதை வஸ்து மாபியாக்களால் சமூதாயத்தில் தோற்றுவிக்கப்படுகின்ற சட்ட விரோத செயல்களிலும், சமயத்திற்கு முரணான விடயங்களிலும் ஈடுபடுவதிலிருந்து தவிர்ந்து வீட்டுக்கும், நாட்டிற்கும் நல்ல பிரஜையாக உருவாவதற்கான ஏற்பாடுகளை பாடசாலைகளிலிருந்தே திட்டமிட்டு நாம் செயற்படுத்த வேண்டும்.

போதைவஸ்து பாவனை சமூகத்தில் எந்தெந்த வடிவில் வருவதென்று எம்மால் அனுமானிக்க முடியாதுள்ளது டொபி, ஐஸ்கிறீம், மாத்திரை, தூள், குடிபாணம் போன்ற வடிவிலென்று அதன் வடிவத்தை நாம் அறியாமல் இருக்கின்றோம். எனவே மாணவர்களும், இளைஞர்களும் மிக இலகுவாக இதில் அகப்பட்டு கொள்ளக்கூடிய நிலமை காணப்படுவது நாம் எதிர் கொண்டுள்ள மிகவும் ஆபத்தான விடயம் என்றும் கூறினார். நிகழ்வில் சமூதாயஞ்சார் சீர்திருத்த உத்தியோகத்தர் ஏ.எம். நிசார், சேவைப்பரிசோதகர் எம்.எஸ். மொகம்மட், பாடசாலையின் ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டனர்

# மலையக ஆசிரியர் உதவியாளர்களை ஆசிரிய சேவைக்குள் இணைத்துக்கொள்ளுமாறு
## கோரி இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கல்வி அமைச்சருக்கு கடிதம்!




மலையக பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய 2015ஆம் ஆண்டு ஆசிரியர் உதவியாளர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டு 8 வருடங்கள் கடந்தும், ஆசிரியர் சேவைக்குள் அவர்கள் உள்வாங்கப்படாமை தொடர்பாக கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் ஆகியோருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்துள்ளார்.

அந்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2015ஆம் ஆண்டு ஆசிரியர் உதவியாளராக நியமனம் வழங்கியபோது மாதாந்த கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு, பின்னர் பல போராட்டங்களுக்கு மத்தியில் கொடுப்பனவானது 10,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

ஆசிரியர் பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு கட்டம் கட்டமாக ஆசிரியர் சேவைக்குள் உள்வாங்கும் வகையில் நியமனம் வழங்கப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஆசிரியர் உதவியாளர்களாக நியமனம் பெற்ற அனேகமானோர் ஆசிரியர் சேவைக்கு உள்வாங்கப்பட்டாலும் சப்ரகமுவ, மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களில் பயிற்சியை நிறைவு செய்து, இறுதி ஆண்டு பரீட்சை பெறுபேறுகள் 2022.10.20 அன்று வெளியாகியும் கூட இதுவரை நியமனத்தினை வழங்காமல் கல்வி அமைச்சும் மற்றும் மாகாண கல்வி அமைச்சும் இழுத்தடிப்பு செய்து வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் பல கடிதங்களை அனுப்பியும், போராட்டங்களை நடத்தியும் இவர்களுக்கான நியாயமான தீர்வு இதுவரை வழங்கப்படவில்லை.

நாட்டின் பொருளாதார நெருக்கடியில் பாரிய பிரச்சினைகளுக்கு இந்த ஆசிரியர் உதவியாளர்கள் முகங்கொடுத்து வருகின்றனர்.

மலையக மக்களின் வாக்கை பெற்று தற்போது கல்வி ராஜாங்க அமைச்சராக இருக்கும் அரவிந்தகுமார் அவர்கள் இவ்விடயத்தில் தலையீடு செய்து மிக விரைவில் ஆசிரியர் நியமனத்தை பெற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என கேட்டுக்கொள்வதோடு, மிக விரைவில் இதற்கான தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டங்களை முன்னெடுக்க நேரிடும் எனவும் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.

# அர்ப்பணிப்புடன் இயங்கும் அதிகாரிகள் பல அரசியல்வாதிகளால் செய்து முடிக்க முடியாத வேலைகளைக்கூட இலகுவாக செய்துவிட்டு போகிறார்கள் :

## அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம். சபீஸ் கருத்து!!





அம்பாறை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளின் மாணவத்தலைவர்களின் தலைவர்களுக்கான ஒரு நாள் தலைமைத்துவ பயிற்சி அக்கரைப்பற்று தேசிய பாடசாலையின் அதிபர் ஏ.பி.முஜீன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வுகளில் கல்வி அமைச்சின் முஸ்லிம் தேசிய பாடசாலைகளுக்கான பணிப்பாளர் என்.ரி.நசுமுடீன் மற்றும் அக்கரைப்பற்று வலயக்கல்வி பணிப்பாளர் ஏ.எம்.ரகுமத்துல்லா உள்ளிட்ட கொழும்பு சாகிறா கல்லூரியின் அதிபர் கம்பஹா பண்டாரநாயக்க கல்லூரி அதிபர் மற்றும் வைத்தியர்கள் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று தேசிய பாடசாலை யில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் நீச்சல் பயிற்சி தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது. இதன் பின்னராக பாடசாலை ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பல்வேறு தலைமைத்துவ விழிப்புணர்வு உரைகளும் நிகழ்வின் நோக்கம் பற்றிய கருத்துகளும் அதிதிகளால் முன்வைக்கப்பட்டன. இதேநேரம் மாணவர்கள் குழுக்களாக இணைந்து குழச் செயற்பாட்டிலும் ஈடுபட்டனர். அத்தோடு மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட புத்தாக்க உற்பத்தி பொருட்களின் கண்காட்சியும் இடம் பெற்றது.

மாணவ தலைவர்களின் மனப்பாங்கு மற்றும் உள விருத்தி செயற்பாட்டில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட இச்செயலமர்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளதுடன் எதிர்கால தலைவர்களை உருவாக்கும் வேலை திட்டமாகவும் அமைந்தமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம். சபீஸ் கருத்து தெரிவிக்கும் போது,

மாணவர்களின் உயர்ச்சிக்காக இயங்கும் என்.ரி.நசுமுடீன் அவர்களை மனதார வாழ்த்துகின்றோம். அர்ப்பணிப்புடன் இயங்கும் அதிகாரிகள் பல அரசியல்வாதிகளால் செய்து முடிக்க முடியாத வேலைகளைக்கூட இலகுவாக செய்துவிட்டு போகின்றார்கள் உதாரணமாக உதாரணமாக என்.ரி.சிராஜுதீன் அவர்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளராக இருந்தபோது பல ஊர்களுக்கு நவீன வீதி விளக்குகள் மற்றும் காபட் வீதிகளை இலகுவாக கொண்டு சேர்த்திருந்தார். அதே போன்று கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் விவகாரங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் என்.ரி.நசுமுடீன் அவர்கள் முதன்முறையாக அம்பாரை மாவட்ட முஸ்லிம் பாடசாலைகளில் தெரிவுசெய்யப்பட்ட மாணவ தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி நிகழ்வினை ஒழுங்கமைத்து கொடுத்திருந்தார்

இளமைப் பருவத்திலிருந்து வாதங்களை களைந்து சிறந்த தலைவர்களை உருவாக்கும் அவர்களது முயற்சி அளப்பெரியது அவருக்கு எங்களது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். இயங்கக்கூடிய அதிகாரிகளை நாம் ஏன் உருவாக்க வேண்டும்? என்பதற்கு இவர் ஒரு எடுத்துக்காட்டாகும். மேலும் இந்நிகழ்வுகளை சிறப்பாக நடத்தி முடிக்க உதவிய அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் அதிபர் ஆசிரியர்கள் அனைவருக்கும் எங்களது நன்றிகள் உரித்தாகட்டும் என்று தெரிவித்துள்ளார்.

## ஊடக நெறிமுறை தொடர்பான பயிற்சி பட்டறை!



முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி ஏற்பாட்டில் சுவீடனை தலைமையகமாக கொண்ட டயகோனியா நிறுவன அனுசரனையில் "சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பகிரும்போது ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் ஒன்றிணைதல்" எனும் தொனிப் பொருளில் தமிழ்மொழி மூல ஒரு நாள் பயிற்சி பட்டறை மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் நேற்று (17) இடம்பெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த சமூகம், சமயம், அரசியல் மற்றும் ஏனைய சமூக ஊடகங்களில் தங்களது கருத்துக்களை பகிர்ந்துவரும் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர் என பல்லின ஆண்கள் பெண்கள் பங்குபற்றுனர்களாக கலந்துகொண்ட இந்நிகழ்வில் உள்ளூர் மற்றும் சர்வதேச ரீதியான நிகழ்வுகளில் வளவாளராக பணியாற்றும் கலாநிதி. எம்.சி.றஸ்மின் வளவாளராகவும், விடிவெள்ளி பத்திரிகை ஆசிரியர் எம்.பி.எம்.பைறூஸ் துணை வளவாளராகவும் கலந்து பங்கேற்றிருந்தனர். இந்நிகழ்விற்கு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக பொறியியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி. அஸ்லம் சஜா அவர்கள் தலைமை தாங்கினார்

கருத்து வேற்றுமை, தனியுரிமை, பரபரப்பு, அநாமோதய தகவல் மூலங்கள், சமூக ஊடகம் மற்றும் உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களை மையமாக வைத்து இதன்போது வளவாளரால் விளக்கமளிக்கப்பட்டது. மேலும், சமூக ஊடகம் மற்றும் இலத்திரணியல் ஊடகம் போன்றவற்றின் நெறிமுறைகள் குறித்தான விரிவான விடயங்கள் ஆராயப்பட்டதுடன் மேற்படி நெறிமுறைகள் தொடர்பில் பங்குபற்றியோரிடமிருந்து கருந்துகள் பெறப்பட்டு எதிர்காலத்தில் பிராந்திய ரீதியாக ஊடக நெறிமுறைகளை ஊக்குவிக்கும் செயற்திட்டமும் வரையப்பட்டது.

தவறான தகவல், பரபரப்பு தகவல், புனைதல், போலியான தகவல், சரிபார்ப்பு இல்லாமை, தகவல்களை உறுதிப்படுத்தாமை, வெறுக்கத்தக்க பேச்சுகளைப் பரப்புதல், சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் இன்னோரன்ன விடயதானங்களை நோக்காக கொண்டு நடாத்தப்பட்ட இப் பயிற்சிப் பட்டறையில் நெறிமுறை உட்குறிப்பு, ஊடக நெறிமுறையில் வித்தியசமான அணுகுமுறைகளைக் கையாளுதல், நெறிமுறையைப் பின்பற்றுவதில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் மற்றும் அதற்கு முன்னோக்கியதான பாதை அத்துடன் எதிர்காலத்திற்கான சிபாரிசுகள் போன்ற விடயங்களில் பங்குபற்றுனர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு அவை குறித்து விரிவாகப் பேசப்பட்ட சிறப்பான ஊடக நெறிமுறை தொடர்பான பயிற்சி பட்டறையாக இது அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

அம்பாறை மாவட்டத்தில் இப்பயிற்சி பயிற்சி பட்டறையை நடாத்துவதற்கான ஏற்பாட்டை சமூக அபிவிருத்தி மன்றம் முன்னெடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## சித்த மருத்துவ பீடமாக தரமுயர்த்தப்பட்ட கிழக்கு பல்கலையின் சித்த மருத்துவ அலகு



கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் அமைந்துள்ள சித்த மருத்துவ அலகு சித்த மருத்துவ பீடமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இந்த அறிவித்தல் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவினால் கையொப்பமிடப்பட்டு, கடந்த 12ஆம் திகதி, அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பிரகடனத்தின்படி, இதுவரை காலமும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் கீழிருந்த சித்த மருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடமாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த பீடத்தினுள் அடிப்படைத் தத்துவம், குணபாடம், நோய் நாடல் மற்றும் சிகிச்சை ஆகிய மூன்று கற்றல் துறைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

தமிழர்களின் பாரம்பரிய வைத்திய முறைமையான சித்த வைத்தியத்தை முறையாகக் கற்பித்து அங்கீகரிக்கும் முனைப்புடன் கிழக்கு மாகாண சித்த வைத்தியர்கள் சங்கத்தினால், சித்த மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கான கோரிக்கை 2004ஆம் ஆண்டு கிழக்கு பல்கலைக்கழகத்திடம் முன்வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் சித்த மருத்துவ பீடத்தை ஸ்தாபிப்பதற்கு கிழக்கு பல்கலைக்கழகப் பேரவை தீர்மானித்ததுடன், அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக திருகோணமலை, கப்பல்துறை ஆயர்வேத வைத்தியசாலையில் விசேட சித்த மருத்துவ நிபுணர் மருத்துவர் என். வர்ண குலெந்திரன் கல்விசார் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் 2007ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுதேச வைத்தியத்துக்கான நிலையியற் குழு, கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் சித்த மருத்துவ, சத்திர சிகிச்சைமாணி பட்டத்தை வழங்குவதற்கான அனுமதியை வழங்கியது.

அதன்படி, 20 மாணவர்கள் சித்த மருத்துவத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டனர்.

2010ஆம் ஆண்டளவில் இந்திய அரசாங்கத்திடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க, சித்த மருத்துவ பீடத்துக்குத் தேவையான சகல பௌதிக வளங்களும் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டதோடு, ஆறு ஆய்வு கூடங்களும் அமைக்கப்பட்டன.

அத்துடன் சித்த மருத்துவ அலகில் கற்கின்ற மாணவர்களின் பயிற்சிகளுக்காக கோணேசர்புரியில் அரசாங்கத்துக்கு சொந்தமான 7 ஏக்கர் காணியில் சித்த மருத்துவ போதனா வைத்தியசாலையும் அமைக்கப்பட்டது. இதன் மூலம் சித்த மருத்துவ, சத்திர சிகிச்சைமாணிப் பட்டதாரிகள் ஒரு வருட உள்ளகப் பயிற்சியையும் பெற்றுக்கொள்ள முடிந்தது.

உள்ளகப் பயிற்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யும் சித்த மருத்துவ, சத்திர சிகிச்சைமாணி பட்டதாரிகள் இலங்கை ஆயுர்வேத மருத்துவப் பேரவையில் பதிவு செய்து அங்கீகரிக்கப்பட்ட சித்த மருத்துவர்களாக சிகிச்சையில் ஈடுபட வழிசெய்யப்பட்டது.

இந்நிலையில், கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் சித்த மருத்துவ பீடத்தை ஸ்தாபிப்பதற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விதந்துரைக்கப்பட்டு, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவினால் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பீடமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

## தேரர்களுக்கு அடிபணிந்து...

இவ்விடயம் தொடர்பில் அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

**மாவை.சோ.சேனாதிராஜா தெரிவிக்கையில்,**

எமது சந்திப்பின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குருந்தூர் மற்றும் திரியாய விகாரைகளுக்கு அருகில் உள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்குமாறே உத்தரவு பிறப்பித்திருந்தார். அவ்வாறான நிலையில் தற்போது அந்த தீர்மானத்துக்கு என்ன நடந்துள்ளது என்பது தொடர்பில் எதிர்வரும் திங்களன்று கொழும்பில் கூடவுள்ள எமது அரசியல்பீடம் ஆராயவுள்ளது.

அதன் பின்னர் நாம் ரணில் விக்கிரமசிங்க விடத்தில் கேள்விகளைத் தொடுக்கவுள்ளோம். அவர் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதுள்ளமை தொடர்பில் மிகுந்த கரிசனை எடுக்கவுள்ளோம் என்றார்.

**சி.வி.விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்,**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பதாக அறிவித்துள்ளார். ஆனால், தற்போது எல்லாவல மேதானந்த தேரர் அவற்றை குழப்பியடிக்கும் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளமை கண்டிக்கத்தக்கதாகும். என்னை பொறுத்தவரையில், எல்லாவல மேலானந்த தேரர் உள்ளிட்டவர்கள் பௌத்த சமயத்தின் வரலாற்றை முழுமையாக தெரிந்துகொள்ள வேண்டும்.

கி.பி. 6ஆம், 7ஆம் நூற்றாண்டுகளிலேயே சிங்கள மொழி வந்தது என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். வரலாறு அவர்களுக்கு கசப்பானதாக இருக்கின்றது. தமிழ் பௌத்தர்கள் இருந்துள்ளார்கள் என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்வதற்கு தயாரில்லை. ஆகவே, வரலாற்றை மாற்றி, பின்னர் அதனடிப்படையில் தமிழர்களுக்குச் சொந்தமான பகுதிகளை கையகப்படுத்த முனைவது ஆக்கிரமிப்பாகும். ஆகவே இந்த விடயங்களில் ஜனாதிபதி ரணில் தீர்க்கமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

**செல்வம் அடைக்கலநாதன் தெரிவிக்கையில்,**

குருந்தூர் மலையில் உள்ள விகாரைக்குச் சொந்தமில்லாத 229 ஏக்கர்களையும் விடுவிப்பதற்கு வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் உள்ளது. அந்தக் கூட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் வருகை தந்திருந்தார்.

அதன் பின்னர், எம்முடன் நடத்திய சந்திப்பின்போதும் அதற்கான உத்தரவாதத்தினை அவர் வழங்கியிருந்தார். தற்போது அந்த உத்தரவாதங்களுக்கு நேரெதிராக அவர் செயற்பட முனைவதானது கண்டிக்கத்தக்கதாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு உத்தரவாதங்களை வழங்குவதும் பின்னர் தேரர்களுக்கு அடிபணிந்து அவற்றை பின்வாங்குவதும் தான் தொடர்ச்சியாக நடைபெறுகின்றது. ஆகவே அவர் இவ்வாறான மாறுபட்ட செயற்பாடுகளை தவிர்த்து நேர்மையாக நடக்க வேண்டும் என்றார்.

**சித்தார்த்தன் தெரிவிக்கையில்,**

வடக்கு, கிழக்கில் இனப் பிரச்சினையானது தற்போது மதப் பிரச்சினையாக உருவெடுக்கும் ஆபத்துக்கள் தோன்றியுள்ளன. உண்மையில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு லிபரல் முகம் காணப்படுகின்றபோதும் அவர் பெரும்பான்மை மக்களின் ஆதரவினைப் பெற்றவராக உள்ளார். ஆகவே அவர் தனது தேர்தல் அரசியலை மையப்படுத்தியே ஏனைய பெரும்பான்மையினத் தலைவர்கள் போன்றே செயற்படுகின்றார். இதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

உண்மையில், இந்துக்களோ தமிழர்களோ பௌத்தத்துக்கு எதிரான மனோநிலையைக் கொண்டிருக்கவில்லை. கோட்பாட்டு ரீதியாக இவ்விரு சமயங்களுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படவில்லை. ஆனால், வன இலாகா, தொல்பொருள் போன்ற விடயங்களை மையப்படுத்தி ஆக்கிரமிக்கப்படும் காணிகளில் பௌத்த அடையாளங்களை நிறுவி அங்கு வலிந்து குடியேற்றங்களைச் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஆகவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேரர்களின் அழுத்தங்களுக்கு அடிபணியாமல் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அவ்வாறில்லாவிட்டால், இனப் பிரச்சினைக்கான தீர்வினை காண்பது மிகக் கடினமானதாக இருக்கும் என்றார்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிக்கையில்,**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நல்லாட்சிக் காலத்திலும் இவ்விதமான செயற்பாட்டையே மேற்கொண்டார். அவர் புதிய அரசியலமைப்பை உருவாக்குவதாக அறிவித்துவிட்டு, பின்னர் மைத்திரியை வீழ்த்தும் செயற்பாட்டினையே முன்னெடுத்தார். இதற்கிடையில் வடக்கில் ஆயிரம் பௌத்த விகாரைகளை நிர்மாணிப்பதற்கான ஒதுக்கீடுகளையும் செய்தார்.

அதேநேரம், படையினர் ஊடாக விகாரைகளை அமைக்கும் பணிகளையும் அவர் தடுக்கவில்லை. இந்த நிலைமைகளால் தான் தற்போது வரையில் பிரச்சினைக்கான தீர்வு உரிய வகையில் காணப்படாமல் இருக்கும். ஆனால், தொடர்ச்சியாக தமிழர்களை ஏமாற்றும் செயற்பாடுகள் தான் நடைபெறுகின்றன.

குருந்தூர் மலை விகாரை விடயத்தில் நீதிமன்றத்தின் கட்டளையை மீறியே அந்த விகாரை கட்டப்பட்டது. அதேநேரம், 1933 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், அங்கு 78 ஏக்கர்கள் தான் விகாரைக்கு சொந்தமானதாக கூறப்படுகின்றது. அங்கு தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளும் உள்ளன. அவ்வாறு இருக்கின்றபோது அந்த மக்களை வெளியேற்றி 300 ஏக்கர்கள் வரையில் தற்போது சுவீகரிப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த விடயத்தில் ரணில் விக்கிரமசிங்க பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்றார்.

## சிங்களக் குடியேற்றங்களை...

செய்யப்பட்டு முன்மொழியப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

அந்தவகையில், வவுனியா வடக்கின் எல்லை பகுதிகளில் பெரும் காடுகள் அழிக்கப்பட்டு அரசின் ஆதரவுடன் பெரும்பான்மையின மக்களின் குடியேற்றங்கள் யுத்தம் முடிவடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்டது.

அவற்றில் சில கிராமங்களின் நிர்வாக செயற்பாடுகளை வவுனியா மாவட்டத்துடன் இணைத்து முன்னெடுப்பதற்கான அவதானம் ஒன்றை செலுத்துமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவால் வவுனியா மாவட்ட நிர்வாகத்திற்கு முன்மொழிவு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்தவகையில், போகஸ்வெவ-1, போகஸ்வெவ-2, வெகரதென்ன, கம்பிலிவெவ, நாமல்கம, நந்திமித்திரகம, சலினிகம, ஆகிய கிராமங்களை சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் தாங்கள் அனுராதபுர மாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழ் இருப்பதால் அரச நிர்வாக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருப்பதுடன் பல்வேறு அசௌகரியங்களையும் சந்தித்து வருகின்றோம்.

ஆகவே எம்மை வவுனியா மாவட்ட நிர்வாகத்துடன் இணைப்பதற்கான நடவடிக்கை ஒன்றை முன்னெடுக்குமாறு எல்லை நிர்ணய ஆணைக்குழுவுக்கும், அதிபர் செயலகத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்தே குறித்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்துமாறு தேசிய எல்லை நிர்ணய குழுவால் மாவட்ட நிர்வாகத்திற்கு பரிந்துரை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக ஆராய்ந்து வவுனியா மாவட்ட நிர்வாகம் அதனை வவுனியா மாவட்டத்திற்குள் உள்ளீர்ப்பதற்கான சாதகமான தீர்மானம் ஒன்றை எடுப்பதாக தீர்மானித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட பகுதிகளில் அரச நிர்வாகங்களால் பெரும்காடுகளை அழித்து தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட பெரும்பான்மையின குடியேற்றங்களால் பல சிங்கள கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை உட்பட பல இடங்களில் இருந்தும் அங்கு மக்கள் குடியமர்த்தப்பட்டனர்.

அந்த கிராமங்கள் உரிய கட்டமைப்புகளை கொண்டிராததமையால் தற்போது அவற்றில் நிர்வாக சிக்கல்கள் இருப்பதை காரணம் காட்டி அவற்றை வவுனியாவுடன் இணைக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் குறித்த கிராமங்களுக்கு சென்ற வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் அந்த மக்கள் பெரும் துன்பப்படுவதாகவும் அவர்களது பிரச்சினை சாதகமான முறையில் தீர்க்கப்பட வேண்டும் என்றும் தொடர்ச்சியாக முயற்சிகளை எடுத்துவந்தமை குறிப்பிடத்தக்கது.

## அதிகமான ஊடகவியலாளர்கள்...

ஊடக அடக்குமுறையின் கீழ் 50க்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் படுகொலைசெய்யப்பட்ட வரலாறு இந்த நாட்டுக்கு மட்டுமே உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

ஊடக ஒடுக்குமுறை சட்டத்தினை ஊடகங்கள் தங்களுக்கு எதிரான கருத்துகளை வெளிவராமல் தடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் கொண்டுவருகின்றது.

இந்த அரசாங்கம் நூறு வருடத்திற்கு இந்த நாட்டினை ஆளப்போவதில்லை என்பதை இவர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும்.

இன்னுமொரு கட்சி அடுத்ததேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியமைக்கும்போது தற்போது உள்ள அரசாங்கத்திற்கு சார்பான ஊடகங்களை இதே சட்டத்தினைக்கொண்டு அடக்குவதற்கான சாத்தியங்களும் இருக்கின்றது.

தாங்கள் தொடர்ச்சியாக ஆட்சியில் இருக்க முடியாது என்பதை நினைவில்கொண்டு அவர்கள் செயற்படவேண்டும்.

மக்கள் தீர்ப்பு என்பதை அரசியல்ரீதியாக நாங்கள் அனைவரும் அறிந்த விடயம். 2019ஆம் ஆண்டு 69இலட்சம் மக்கள் வாக்களித்து ஜனாதிபதியான கோத்தபாய, அதே மக்களினால் இருப்பதற்கு இடமில்லாமல் துரத்தியடிக்கப்பட்டார். அந்த நிலைமை இன்னுமொருவருக்கு வராது என்பதற்கு எந்தவொரு உத்தரவாதமும் இல்லை.

மக்களுக்கோ மக்கள் நலன்சார்ந்த திட்டங்களுக்கோ எதிராக செயற்படும் எந்த அரசாங்கத்தினையும் தேர்தல் மூலமாக மாத்திரமல்ல வேறுவிதமாகவும் துரத்தியடிக்கும் நிலையுருவாகும். ஏற்கனவேயிருந்துள்ளது என்பதை நினைவில் வைத்துக்கொண்டு செயற்படவேண்டும்.

ஊடகம் என்பது இந்த நாட்டில் உள்ள செயற்பாடுகளை மக்களுக்கு தெளிவுபடுத்தும் ஒரு சாதனம் என்பதை இந்த அரசாங்கம் புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.- என்றார்.

## நாட்டில் அரசியல் ஸ்திரத்...

என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே நாட்டில் நாடாளுமன்ற தேர்தல் ஒன்றின் அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் பொருளாதார பின்னடைவில் இருந்து மீள்வதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் தற்போது பொது நிறுவனங்களை தனியாருக்கு விற்று அதன் மூலம் நிதிகளை பெறுவதற்கு முயற்சிப்பதாகவும் ஆனால் தனியாரின் கைகளுக்கு பொது நிறுவனங்கள் செல்லும் போது நாட்டு மக்களே அதிகளவில் பாதிக்கப்படுவார்கள் என்றும் சுரேஸ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

## யாழில் சட்டவிரோத மணல்...

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு குடாரப்பு பகுதியில் மணல் யாட் அமைத்து இராணுவத்தில் பணியாற்றிய ஒருவர் சட்டவிரோத மான மணல் கொள்ளையில் ஈடுபடுவதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பகிரங்கமாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இடம்பெற்றவேளை சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும், அதனை பொலிஸார் கண்டுகொள்வதில்லை எனவும் மக்கள் குற்றச்சாட்டு முன்வைத்து வேளையே பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

குடாரப்பு பகுதியில் இராணுவத்தில் பணியாற்றிய ஒருவர் யாட் அமைத்து சட்டவிரோதமான மணல் அகழ்வில் ஈடுபட்டுவருவதாகவும், குறித்த நபர் இராணுவத்தில் பணியாற்றியவர் என்றும் இதனால் மக்கள் அவர் குறித்த தகவல்களை வழங்க அச்சப்படுவதாகவும் குறுப்பிட்டார்.

இதேவேளை சட்டவிரோதமான நடவடிக்கைகளை தவிர்ப்பதற்கு மருதங்கேணி, நாகர்கோவில், வல்லிபுரம், முள்ளிச்சந்தி ஆகிய நான்கு இடங்களிலும் பொலிஸ் மற்றும் இராணுவ காவலரண்கள் இருக்கின்ற நிலையில் இது எவ்வாறு இடம்பெறுகிறது என கிராம மட்ட அமைப்பு பிரதிநிதிகள் கேள்வி எழுப்பினர்.

## தனிச்சிங்கள சட்டம் நாட்டிற்கு...

பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசியல் கருத்துப்பரிமாறல் நிகழ்வில் கலந்துகொண்டவேளை அவர் இதனை தெரிவித்துள்ளார்.

உங்களது தந்தை தனிச்சிங்கள சட்டத்தை கொண்டுவந்திருக்காவிட்டால் நாடு தற்போது மிகவும் முன்னேற்றகரமான நிலையில் இருந்திருக்கும். இதனை பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? என நேயர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் சுனேத்திரா பண்டாரநாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

ஆம், நான் இதற்கு பதிலளிக்க விரும்புகின்றேன். அவர் எனது தந்தை, ஆனால் இந்த நேயர் அல்லது நபர் ஒருவர் தெரிவித்ததை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன் என எஸ்டபிள்யூஆர்டி பண்டாரநாயக்கவின் மூத்த புதல்வியான சுனேத்திரா தெரிவித்துள்ளார்.

நான் இதனை எப்போதும் தெரிவித்திருக்கின்றேன். உண்மையை சொல்லியாக வேண்டும். ஆம், ஏன் அவர் தனிச்சிங்கள சட்டத்தை கொண்டுவந்தார்? அரசியல் சந்தர்ப்பவாதம் அரசியல் ரீதியில் பிரபலமாவது - உண்மையில் எனக்கு தெரியாது.

ஆனால் இந்த நபர் தெரிவிப்பது உண்மை. அது எனக்கு ஆழ்ந்த கவலையை அளிக்கின்றது என சுனேத்திரா தெரிவித்துள்ளார். இதற்கு சமூக ஊடகங்களில் பாராட்டுக்கள் வெளியாகியுள்ளன.

உண்மையை சொன்னதற்கு நன்றி சுனேத்திரா என பதிவிட்டுள்ள ஒருவர் குறுகிய அரசியல் இலாபங்களிற்காக மக்களை தவறாக வழிநடத்தும் அரசியல் கதையாடல்களிற்கு பதில் பதில் நாட்டின் அரசியல்வாதிகள் நேர்மையானவர்களாக செயற்பட்டால் நாங்கள் எவரும் தடுத்துநிறுத்த முடியாத தேசமாக காணப்பட்டிருப்போம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!**

**தொலைபேசி :**
**021 222 7557**
**+94 76 567 3339**

# காரைதீவு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் மர நடுகை நிகழ்வு



காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் காரைதீவு பிரதேச செயலக நடராஜானந்தா மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் மர நடுகை நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் த.கமலநாதன் அவர்களினால் மரக்கன்றுகள் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போது அங்கத்தவர்கள் 24 பேருக்கு ரூபா 1,750,000 கடன் வழங்கியதுடன், 24 பழ மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டது.

மற்றும் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவியும் கௌரவிக்கப்பட்டார்.

# லீடர் அஸ்ரப் வித்தியாலய மாணவர்களுக்கு பாடசாலை பாதணிகள் வழங்கும் நிகழ்வு!




கல்முனை கல்வி வலய சாய்ந்தமருது கமு/ கமு/ லீடர் எம்.எச்.எம். அஸ்ரப் வித்தியாலய வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை பாதணிகள் வழங்கும் நிகழ்வும், தெரிவு செய்த மாணவர்களின் பெற்றோர்கள் சந்திப்பும் பாடசாலை மண்டபத்தில் பாடசாலை அதிபர் எம். ஐ.சம்சுதீன் தலைமையில் வெள்ளிக்கிழமை (16) நடை பெற்றது.

வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கை (சாய்ந்தமருது) சகோதரி ஒருவரின் உதவியினால் கிடைப்பெற்ற இந்த பாடசாலை பாதணிகள் வழங்கும் நிகழ்வில் அல்- மீஸான் பௌண்டஷன் தவிசாளர், ஊடகவியலாளர் யூ.எல். என்.நூருல் ஹுதா, பாடசாலை பிரதியதிபர் எஸ்.எம்.சுஜான், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு செயலாளர், பகுதித்தலைவர்கள், ஆசிரிய ஆசிரியைகள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய பாடசாலை அதிபர் எம். ஐ.சம்சுதீன், மாணவர்களின் கல்விக்கு சீருடை தடையாக இருக்க கூடாது என்ற அடிப்படையில் இந்த பாதணிகள் வழங்கப்படுவதாகவும், மாணவர்கள் கல்வியில் தமது முழுமையான ஈடுபாட்டை காட்டி தமது இலக்கை அடைய முழுமையாக அர்ப்பணித்து கல்வி கற்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும், குறித்த பாதணிகளை வழங்கிய தனவந்தருக்கு நன்றிகளை தெரிவித்த அவர், இந்த பாடசாலையின் கடந்த கால அடைவுகள் மற்றும் எதிர்கால இலக்குகள் பற்றி பெற்றோருக்கு விளக்கியதுடன் பாடசாலை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிலும் பெற்றோர்கள் கரிசனை செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மேலும் பெற்றோர்களின் அலட்சியமான சில நடவடிக்கைகள் பிள்ளைகளை தவறான பாதைக்கு கொண்டு செல்வதையும், இப்போது அதிகரித்து வரும் போதைப்பொருள் பாவனையிலிருந்து தமது பிள்ளைகளை பாதுகாக்க பெற்றோர்கள் விழிப்புடன் இருக்கவேண்டிய அவசியம் மற்றும் முக்கிய பல கண்காணிப்புக்கள் தொடர்பிலும் உரையாற்றிய அல்- மீஸான் பௌண்டஷன் தவிசாளர், ஊடகவியலாளர் யூ.எல்.என்.நூருல் ஹுதா, மாணவர்களின் கல்வியில் இப்பாடசாலையின் வகிபாகம், பாடசாலையின் உயர்ச்சி பாதை, அதிபர் மற்றும் பாடசாலை முகாமைத்துவ குழுவின் அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை பாராட்டி பேசினார். தொடர்ந்தும் இந்த பாடசாலை மேம்பாட்டுக்கு பெற்றோர்களின் பங்களிப்பும், ஏனைய நலன்விரும்பிகளின் உதவிகள் தொடர்பிலும் உரையாற்றியதுடன் பாதணிகளை வழங்கிய தனவந்தருக்கு தமது நன்றிகளையும் பிரார்த்தனைகளையும் தெரிவித்தார்.

# பொதுமக்கள் குறைதீர்க்கும் பிரிவு அங்குரார்ப்பணம்!



கிழக்கு மாகாண மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் தீர்வு வழங்கும் முகமாக "ஆளுநரின் பொது மக்கள் குறைதீர்க்கும் பிரிவு" உத்தியோகபூர்வமாக வெள்ளிக்கிழமை (16), கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

திருகோணமலை முதலமைச்சர் அலுவலகத்தில் பொது மக்கள் குறைதீர்க்கும் பிரிவு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில், கிழக்கு மாகாண பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# வவுனியா மாவட்ட எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல்



வவுனியா மாவட்ட எல்லை மீள் நிர்ணயம் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (16.06) இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்கள் தொகையை அடிப்படையாக கொண்டு சில கிராம அலுவலர் பிரிவுகளை பிரிப்பதற்கும், சில பிரிவுகளை இணைப்பதற்கும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள மக்கள் நிர்வாக நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்ளும் பொருட்டு வவுனியா பிரதேச செயலக பிரிவில் பட்டாணிச்சூர், வேப்பங்குளம், பண்டாரிக்குளம், கூமாங்குளம், உக்குளாங்குளம், மகாறம்பைக்குளம் என்பனவும் செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவில் மெனிக்பாம், ஆண்டியாபுளியங்குளம் என்பனவும் தனி கிராம அலுவர் பிரிவுகளாக பிரிப்பதற்கும், கலாபோகஸ்வேவ உள்ளிட்ட 4 சிங்கள குடியேற்ற கிராமங்களின் நிர்வாக நடவடிக்கையை வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் இணைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்றங்களில் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய ஆணையாளராக நடராஜா சிவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமா நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ள நடராஜா சிவலிங்கம் வருகின்ற திங்கட்கிழமை காலை மட்டக்களப்பு மாநகர சபைக்கு சென்று தனது கடமையினை ஆரம்பித்தார் எனவும் தெரியவருகின்றது..

இலங்கை நிருவாக சேவை (தரம் -1 ) உத்தியோகத்தரான இவர் உலக வங்கி திட்டத்திலும், பின்னர் மட்டக்களப்பு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் பிரதி ஆணையாளராகவும் கிழக்கு மாகாண கூட்டுறவு திணை களத்தில் ஆணையாளராகவும் பணியாற்றியுள்ளார்

# ஊடக ஒடுக்குமுறைச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது: சார்ள்ஸ் எம்.பி

ஊடக ஒடுக்குமுறைச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஊடகத்தை அரசாங்கத்திற்கு எதிராக செயற்படாமல் தடுப்பதற்காக அல்லது ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்கு எதிராக செயற்படுவதற்காக ஊடக ஒடுக்குமுறை சட்டத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளது. உண்மையில் ஊடக ஒடுக்குமுறைச் சட்டம் என்பது தேவையில்லை. ஜனநாயக வழியில் உண்மையை ஊடகங்கள் வெளிக் கொண்டு வரும் நிலையில் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துக்கள் ஊடகங்கள் ஊடாக வரக் கூடாது என்ற நோக்கத்திற்காக இதை கொண்டு வருகின்றார்கள். இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரக் கொள்கையில் நீண்ட கால கொள்கை இல்லை. ஆட்சியாளர்கள் தாங்கள் நினைத்தவாறு தீர்மானங்களை எடுத்து தங்களது ஆட்சியை தக்க வைப்பதற்காக பௌத்த இராணுவ மேலாதிக்கத்தின் அடிப்படையில் தீர்மானங்களை எடுத்து வருகிறார்கள். பல அரச நிறுவனங்களால் அரசாங்கத்திற்கு பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. நஸ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை எடுப்பதற்கு யாரும் முன்னுக்கு வரமாட்டார்கள். இந்த நிறுவனங்கள் தொடர்பாக அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டும்.

இவைதவிர, 1994 ஆம் ஆண்டு செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீரபுரம் மக்களுக்காக 400 ஏக்கர் காணிகள் ஒதுக்கப்பட்டு அவர்களின் வாழ்வாதாரத்திற்காக ஒரு ஏக்கர் வழங்கப்படும் எனக் கூறி குடியமர்த்தினார்கள். இன்னும் அந்த மக்களுக்கு காணிகள் வழங்கப்படவில்லை. ஒதுக்கப்பட்ட காணிகளில் 75 வீதமான காணிகள் வவுனியா தெற்கைச் சேர்ந்த பெரும்பான்மையினத்தை சேர்ந்த சிங்கள மக்கள் அபகரித்துள்ளார்கள்.

இது தொடர்பாக மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் பேசியிருந்தேன். மதுராநகர் மக்கள் காணி இல்லை என குடியேறுகின்ற போது அதற்கு வவுனியா தெற்கு பௌத்த மதகுரு அனுமதித்தால் தான் காணி வழங்க முடியும் என மாவட்ட செயலகத்தில் எனக்கு பதில் வழங்கப்பட்டது. ஆனால் வீரபுரத்தில் எமது காணிகளை அவர்கள் பிடிக்கிறார்கள். இது நிறுத்தப்பட்டு வீரபுரம் மக்களுக்கு அந்த காணிகள் பகிர்த்தளிக்கபட வேண்டும் எனத் தெரிவித்தார்.








இப்பத்திரிகை அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, மின்னிதழாக வெளியிடப்படுகிறது.